# அருள் ஒளி




தொண்டுப் பணிகள் ஆற்றிவரும்
தெல்லிப்பழை இந்து இளைஞர்
சங்கத்தின்
வைர விழா சிறப்புற
வாழ்த்துகள்

இதழ்: 172 ஐப்பசி~2025

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை இலங்கை.

உ
அம்பாள் துணை

# அருள் ஒளி

மாதாந்த சஞ்சிகை (ஐப்பசி ~ 2025)

ஆசிரியர்
கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்
திரு. ச. சந்தோஷன் அவர்கள்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை இலங்கை.

T.P: 021 321 3151, 021 224 1909
Email: thurkaiammantemple@mail.com
facebook: @tellidurga

பதிவு இல: ISSN 2362 - 0587
ISSN 978 - 955-23 - 0019 -3

## தேசம் செழிப்பதற்கு மர நடுகையை ஊக்குவிக்க வேண்டும்

**ஆசிரியர் உரை**

மிக வரட்சியை நாம் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். எங்கள் மண்ணில் மழை சீராக இருக்க வேண்டுமானால். மரங்களின் வளர்ச்சியும் அத்தியாவசியமாகும். மெஞ்ஞானத்திலும் விஞ்ஞானத்திலும் மரங்கள் மனிதனுக்கு தேவை என்பதை வலியுறுத்துகிறார்கள். மெஞ்ஞானிகள் விருட்சங்களுக்கு பூசைகள் வைத்து, விருட்சங்களை தெய்வமாக வழிபாடு செய்கின்ற பண்பை காலத்துக்கு காலம் உணர்த்தினார்கள். இன்று விஞ்ஞானிகள் நாடு சீராக சிறப்பாக இருப்பதற்கு விருட்சங்கள் அத்தியாவசியமானவை, எங்கும் மரம் செடி கொடிகள் நிறைவாக இருக்க வேண்டும் என்று வேண்டுகின்றார்கள்.

35 ஆண்டு கால யுத்தத்திலே வடக்கிலே பாரிய மரங்கள் பல அழிந்தொழிந்து போய்விட்டது. போருக்குப் பின்னால் மரம் நாட்டுகை என்பது சம்பிரதாயபூர்வமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறதே ஒழிய அக்கறையாக நடைபெறுவதில்லை. பாடசாலைகள் தோறும் மரம் நடுகையை ஊக்குவித்தல் வேண்டும். வீடுகள் தோறும் மரம் நடுகையை ஊக்கிவித்தல் வேண்டும். வீதியோரங்களில் மரங்களை நடுகின்ற போது மின்சாரம் தொலைத்தொடர்பு போன்றவற்றிற்காக

மரங்களை அழிப்பதை தவிர்த்து மேலை நாடுகள் போல் நிலத்துக்கு கீழாக மின்சாரம் தொலைத்தொடர்பு வலையமைப்புக்களை நிறுவ வேண்டும். இல்லையென்றால் மரங்கள் நடுவதும் பின்பு அவற்றை வெட்டி வீழ்த்துவதும் வாடிக்கையாகி விடும்.

மேலை நாடுகளிலே நகரங்களில் கூட ஒரு சிறிய பகுதியை பூங்காவாக அல்லது ஒரு சிறிய காடாக உருவாக்க தவறுவதில்லை. ஒரு புதிய குடியேற்ற திட்டத்திற்கு அருகில் பூங்காவும் இருக்கும். ஒரு சில பகுதிகளை காடாக வைத்திருப்பார்கள். இதற்கான ஒதுக்கீடுகளை திட்டமிட்டு செயற்படுத்துகிறார்கள். பட்சிகள், பறவைகள் ரீங்காரம் செய்து, அந்த சூழலை ரம்மியமாக வைத்திருக்கும். சில உயிரினங்கள் அந்த கிராமத்திலே வாழ்ந்து இயற்கையை சமநிலையில் வைத்திருக்கும். சில பறவைகள் எமக்கு பயன் தருகின்றன. மனித வாழ்க்கையினுடைய இசைவாக்கத்துக்கு உதவுகின்றது. பறவைகள் சில நஞ்சு நிறைந்த பூச்சி புழுக்களை உண்டு மக்களுக்கு கெடுது இல்லாமல் காப்பாற்றுகின்றன. எனவே தான் பறவைகளுடைய தேவைகள் பற்றி விஞ்ஞான உலகம் இன்று முக்கியத்துவம் கொடுத்து காடுகளை உருவாக்குகின்றார்கள்.

வடக்கில் இன்று பல பறவைகள் அழிந்து போய்விட்டது. குறிப்பாக செண்பகம் என்கின்ற பறவை விவசாயிகளுக்கு மிகவும் பயன் தந்த ஒரு பறவை. அது இன்று மிகவும் அருகி விட்டது. இதுபோல ரீங்காரம் இடுகின்ற நல்ல ஓசைகளை எழுப்புகின்ற பலவிதமான குருவிகள் விவசாயிகள் நச்சு மருந்துகளை பயன்படுத்துகின்ற காரணத்தால் அழிந்து கொண்டு போகின்றன. இவற்றுக்குரிய கட்டுப்பாடுகள் வரவேண்டும்.

எனவே பறவைகள் தங்குவதற்கு மரங்கள் தேவை, மனிதர்கள் நல்ல காற்றை சுவாசிப்பதற்கு மரங்கள் தேவை. மழை பெய்வதற்கு மரங்கள் தேவை. எத்தனையோ விதமான சிற்பங்கள், பாத்திரங்கள், உபகரணங்கள் மனிதனுடைய இருப்பிடங்களை அமைப்பதற்கு மரங்கள் தேவை. மரம் இல்லையென்றால் மனிதன் இல்லை. மனிதனின் தேவைகளுக்கு உதவுகின்ற மரங்களை நாம் கட்டாயம் நாட்ட வேண்டும். பல்வேறு புதிய புதிய அமைப்புகள் தோன்றி மரங்களை நடுகின்றார்கள். ஆனால் அந்த மரங்களைப் பராமரிக்கின்ற நிறுவனங்கள் மிகக் குறைவு. மரங்களை நட்டு படம் பிடித்து வேற்று நாட்டவரிடம் நிதி பெறுபவர்களும் இலங்கையில் அதிகமாகிவிட்டனர். இந்த மரங்களை தொடர்ந்து பராமரிப்பதற்கு தண்ணீர் வண்டிகளையோ அல்லது அதற்கு ஊழியர்களையோ

நியமிக்கின்ற பழக்கம் எம்மிடம் இல்லை. இது கவலைக்குரிய விடயம்.

எனவே வடக்கில் மரநடுகைத் திட்டம், சிறிய காட்டுத்திட்டம், பட்சிகளை வளர்க்கின்ற திட்டங்களை நாம் அதிகரிக்க வேண்டும். மனிதன் மன ரம்யமாக இருப்பதற்கு நல்ல பறவைகள் நாம் வாழும் சூழலில் வாழ வேண்டும். இன்று பச்சை கிளிகள் கூட அருகிக் கொண்டு போகின்றது. நல்ல அழகான மிகப் பழமை வாய்ந்த வரலாறு கொண்ட பறவைகள் எம்மிடத்தில் இருந்து விடை பெற்றுவிட்டது.

இவற்றிற்கெல்லாம் மூல காரணம் போரின் போது பயன்படுத்தப்பட்ட நச்சு ஆயுதங்கள், விவசாயத்தின் போது பயன்படுத்தப்படுகின்ற நச்சு கிருமி நாசினிகள். இது எல்லாம் சூழலை பாதித்திருக்கின்றது. எனவே ஆய்வு கட்டுரைகளை எழுதி இவை எல்லாம் பாதிப்பு என்றால் மட்டும் போதாது பயனுள்ள காரியங்களை மக்களிடம் நேரடியாக களத்தில் இறங்கி செய்பவர்கள் வேண்டும். அதற்கு பல்கலைக்கழக கல்விமான்களும் முன் வர வேண்டும். சமூகமும் ஒத்துழைக்க வேண்டும்.


**கலாநிதி. ஆறு. திருமுருகன்**
**ஆசிரியர் ~ அருள்ஒளி**

## கீரிமலையில் தேர் தரிப்பிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது




பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வரத்தில் 41 அடி உயரம் கொண்ட பூசாந்திர சித்திரத் தேருக்கான புதிய தேர் இருப்பிட கட்டுமான வேலைகளுக்காக 12.09.2025 காலை 9.30 மணிமுதல் 10 மணிவரை உள்ள சுபமுகூர்த்ததில் அடிக்கல் நாட்டப்பட்டது.

# வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோயில் மகோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது




ஈழத்தின் வரலாற்று சிறப்புமிக்க திருத்தலங்களில் ஒன்றாக விளங்கும் வல்லிபுர ஆழ்வார் கோயில், வருடந்தோறும் நடைபெறும் மகோற்சவத்தை முன்னிட்டு இவ்வாண்டும் பக்தி பூர்வமான ஆன்மிக உற்சாகத்துடன் திரளான பக்தர்கள் பங்கேற்றனர்.

பல்லாண்டு கால பாரம்பரியத்தைத் தொடர்ந்து, கோயிலில் நடைபெற்ற மூலவர் சிறப்பு திருவிழாக்கள், தேர்த்திருவிழா, சமுத்திர தீர்த்தம் போன்ற நிகழ்வுகள் மிகுந்த சிறப்புடன் நடைபெற்றன. ஆழ்வார் பெருமாள் திருவிழாவின் முக்கிய நாளான தேர்த்திருவிழா அன்று, அழகிய அலங்கரிக்கப்பட்ட பெருமாள் தேரில் எழுந்தருளி, பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதனை காண அலைமோதிய மக்கள் “கோவிந்தா! கோவிந்தா!” என முழங்கினர்.















சமுத்திர தீர்த்த நிகழ்வில், சக்கரத்தாழ்வாரோடு ஆயிரக்கணக்கான பக்தர்கள் கடலில் புனித நீராடி, தங்கள் வாழ்க்கையில் நன்மை நிலைக்க வேண்டி பிரார்த்தனை செய்தனர்.




இந்த ஆண்டின் மகோற்சவம் வடமராட்சி மக்களின் ஆன்மிக ஒன்றிப்பையும், பண்பாட்டு ஒற்றுமையையும் வெளிப்படுத்தியது. மாயவனின் அருளால் நிறைந்த வல்லிபுரம், திருவிழா நாட்களில் உண்மையிலேயே பூமியாக மாறியது.



# மகளீர் இல்லப் பிள்ளைகளுக்கு நவராத்திரி போட்டிகள்







நவராத்திரி விழாவை முன்னிட்டு துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள் இடையே போட்டிகள் இடம்பெற்றன. தெல்லிப்பழை துர்க்காதேவி அன்னையின் நிழலில் வளர்கின்ற எமது மகளீர் இல்ல பிள்ளைகள் பண்பாட்டு ரீதியாக வலுப்பெறும் நோக்குடன் இப்போட்டிகள் இடம்பெற்றன. மிகுந்த உற்சாகத்துடன் மகளீர் இல்லப் பிள்ளைகள் இந்த போட்டியில் பங்குபற்றினர்.


























# மாவைக் கந்தன் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு எழுந்தருளி வன்னி வாழை வெட்டினார்.



02.10.2025 அன்று, மாவிட்டபுரம் கந்தன் தம் பக்தர்களின் வேண்டுகோளை ஏற்று, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு எழுந்தருளினார். பக்தர்கள் திரளாகக் கூடி, பக்தி பூர்வமாக முருகப் பெருமானை வரவேற்றனர். தேவஸ்தானம் முழுவதும் தெய்வீக கீதங்களும், வாத்திய இசைகளும் ஒலித்தன. அதனைத் தொடர்ந்து, பாரம்பரிய முறையின்படி வன்னி வாழை வெட்டல் நிகழ்ச்சி நடைபெற்றது.

பெருமளவு பக்தர்கள் கலந்துகொண்டு தனயனான முருகப்பெருமான் அருளையும், தாயான அன்னை துர்க்காதேவி தாயாரையும் வழிபட்டனர். சமூக ஒற்றுமையையும், ஆன்மிக உயர்வையும் வலியுறுத்தும் வகையில் இந்த விழா சிறப்பாக நிறைவு பெற்றது. இவ்வாறான சடங்குகள், எமது தமிழ் பாரம்பரியத்தையும், சைவ சமய நம்பிக்கைகளையும் தலைமுறைத் தலைமுறையாகக் கொண்டு செல்லும் வழியாக அமைகின்றன.











# தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் வன்னி வாழை வெட்டும் நிகழ்வு பக்தி பூர்வமாக இடம்பெற்றது

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் ஆண்டுதோறும் நவராத்திரி திருவிழா மிகுந்த பக்திப்பூர்வமாகக் கொண்டாடப்படுகிறது. அம்பாளின் அருள் பெறும் நோக்கில் பக்தர்கள் ஒன்பது நாட்கள் விரதமிருந்து விசேட பூஜைகளில் கலந்து கொள்வது பாரம்பரியமாக இருந்து வருகிறது.

நவராத்திரி விரத நாட்களில் துர்க்கையம்மனுக்கும், இலட்சுமி தேவிக்கும், சரஸ்வதி தேவிக்கும் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. பக்தர்கள் திரளாகக் கூடி, தெய்வீக காட்சியைக் கண்டு மகிழ்ந்தனர்.

இறுதி நாளான விஜயதசமி அன்று காலை நேரத்தில் பாரம்பரிய முறையின்படி வன்னி வாழை வெட்டும் நிகழ்வு சிறப்பாக நடத்தப்பட்டது. பக்தர்கள் அனைவரும் பங்கேற்று அம்பாளின் அருளைப் பெற்று ஆனந்தத்துடன் வீடு திரும்பினர்.








# கனடாவில் உலக திருக்குறள் மாநாட்டில் கலந்து கெண்டு சிறப்புரை ஆற்றி நாடு திரும்பிய செஞ்சொற்செல்வருக்கு சிறப்பு மரியாதை



கனடாவில் நடைபெற்ற 6 ஆவது உலகத்திருக்குறள் மாநாட்டில் சிறப்பு அதிதியாக அழைக்கப்பட்டு, சிறப்புரை ஆற்றி, உலகின் பிரபல பேச்சாளர்களோடு உயர் கௌரவம் பெற்ற எமது தேவஸ்தானத்தின் நிர்வாக சபைத் தலைவர் கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள் நாடு திரும்பி, எமது ஆலயம் வந்து நவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்ட போது ஆலய சமூகத்தினராலும் அன்பர்களாலும் செஞ்சொற்செல்வருக்கு மரியாதை செய்யும் நிகழ்வு 24.09.2025 அன்று தேவஸ்தான முன்றலில் இடம்பெற்றது. ஈழத்தில் மாவிட்டபுரம் மண்ணில் திருக்குறளுக்கு வளாகம் அமைத்து கருக்கற்களில் பொய்யாமொழியையும் அதை தந்த வள்ளுவனையும் வடிவமைத்த பெருமகனாரை உலகத் திருக்குறள் மாநாட்டில் கௌரவித்தமை இம்மண்ணின் மக்களாக நாம் பெருமைப்படுகின்ற விடயமாகும்.



















Male Devotees must remove Shirts, t-shirts
or Tops before entering the Temple



# தமிழ்த்தினப் போட்டியில் எங்கள் இல்ல மாணவியின் சாதனை



தமிழ் உலகின் தொன்மையான, செழுமையான மொழியாக விளங்குகிறது. தமிழின் மேன்மையையும், அதன் பண்பாட்டையும் வெளிப்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் இலங்கையில் தமிழ்த்தினம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் பல்வேறு பேச்சுப் போட்டிகள், கட்டுரை போட்டிகள், பாடல், கவிதை மற்றும் நாடகப் போட்டிகள் நடத்தப்பட்டு மாணவர்களின் திறமைகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

இவ்வாறான தமிழ்த்தினப் போட்டிகளில், மேற்பிரிவு கட்டுரை போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற எங்கள் துர்க்காபுரம் மகளீர் இல்ல மாணவி செல்வி. அவிலாஜினி (இராமநாதன் கல்லூரி) அவர்கள், அனைவருக்கும் பெருமை சேர்த்துள்ளார். அவரது நயமான எழுத்துத் திறனும், செறிந்த சிந்தனையும் நடுவர்களை கவர்ந்து, அவருக்கு முதலிடம் பெற்றுத் தந்தது.

இந்த சாதனை எம் துர்க்காபுரம் மகளீர் இல்லத்தின் கல்வி முன்னேற்றத்தையும், மாணவிகளின் திறமைகளையும் வெளிக்காட்டுகிறது. செல்வி. அவிலாஜினி போன்ற மாணவிகள் எமது தமிழ் சமூகத்திற்குப் புதிய உந்துசக்தி அளிக்கின்றனர். எமது வாழ்த்துகளையும், எதிர்காலத்தில் இன்னும் பல உயர்வுகளை எட்ட எமது மனமார்ந்த பிரார்த்தனைகளையும் அவருக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.



# தட்டித் திறக்குமா சொர்க்க வாசல்

கரிஷி மந்தபாலர் கடும் பிரம்மச்சாரி. எப்போதும் இறைச் சிந்தனையில் தோய்ந்திருப்பவர். அவருக்கு சொர்க்கம் புகும் ஆசை தவிர வேறு எந்த ஆசையும் கிடையாது. ஜொலிக்கும் விழிகளும் வெண்ணிறத் தாடியும் ஜடாமுடியுமாய் நாளுக்குநாள் அவரது வசீகரம் கூடியது. மந்தபாலர் தம் தவ வாழ்வில் நிறைவுகண்டு, தாமே விரும்பி சொர்க்கம் புக முடிவு செய்தார். அக்கினியை வளர்த்த மந்தபாலர், தன் இறுதி வேண்டுகோளைச் சமர்ப்பித்தார்: “ஏ அக்கினியே! எத்தனையோ முறை வேள்வித் தீ வளர்த்து, சமித்துக்களை ஆகுதியாகப் பெய்து உன்னை ஆராதித்திருக்கிறேன். இன்று நான் உன்னை வளர்ப்பது என்னையே ஆகுதியாக நீ ஏற்பதன் பொருட்டே. மனத்தாலும் முழு பிரம்மச்சாரியாக வாழ்ந்த என்னை ஏற்று என் ஆன்மாவை சொர்க்கத்திற்கு அனுப்புவாயாக!”

இவ்விதம் முழங்கிய அவர், நெருப்பில் சடாரெனக் குதித்தார். சக முனிவர்கள் சடசடவென அவர் உடல் எரிவதைப் பார்த்துக் கைகூப்பி அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்கள். அவரது ஆன்மா நட்சத்திரம் போல் ஒளி வீசியவாறு விண்ணில் பறந்தது. சொர்க்கத்திற்குச் சென்ற மந்தபாலர், சொர்க்க வாசல்முன் நின்றார். ஆனால் சொர்க்கத்தின் கதவுகள் அவருக்குத் திறக்கவில்லை. தடதடவென அதன் தங்கக் கதவுகளைத் தட்டினார். கதவைத் திறந்துகொண்டு உள்ளிருந்து வந்தான் ஒரு தேவன். “யார் நீங்கள்? என்ன வேண்டும்?” என்று அதட்டினான்.

“நான் மகரிஷி மந்தபாலன். சொர்க்கம் புக வந்திருக்கிறேன், கதவைத் திறவுங்கள்’ என்றார் முனிவர். தேவன் கடகடவென்று சிரித்தான். “மந்தபாலரே! சொர்க்கத்தின் கதவுகள் தட்டித் திறக்கப்படுவதல்ல் தானாய்த் திறந்தால்தான் உண்டு. நீங்கள் சொர்க்கம் புகத் தகுதியானவர் என்றால் இந்தக் கதவுகள் உங்களுக்காகத் திறந்து உங்களின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருக்கும். அப்படித் திறவாததால் உங்களுக்கு சொர்க்கம் புகத் தகுதி இல்லை என்றே பொருள்!”

மந்தபாலர் வியப்படைந்தார். தவ சிரே‘டரான தனக்கு சொர்க்கம் புக அனுமதி கிடையாதா? தம் தவ வலிமையின் அர்த்தம்தான் என்ன? “தேவனே! தவத்தை அன்றி வேறெதையும் நான் செய்ததில்லை. ஏன் எனக்கு சொர்க்கம் மறுக்கப்படுகிறது?” தேவன் நகைத்தபடிச் சொல்லலானான்: “மந்தபாலரே! ஒவ்வோர் உயிரும் பூமிக்கு அனுப்பப்படும்போது படைப்பாற்றலுடன்தான் அனுப்பப்படுகிறது. பூமி தொடர்ந்து இயங்க வேண்டும் இல்லையா? படைப்பாற்றலைப் பயன்படுத்த வேண்டியது ஒவ்வோர் உயிரின் அடிப்படைக் கடமை. இயற்கையிலேயே ஒருவருக்கு மக்கட் செல்வம் கிட்டவில்லை என்றால் அது ஒப்புக் கொள்ளக் கூடியதே. ஏதேனும் ஒரு நோக்கத்திற்காக ஒருவர் பிரம்மச்சரிய விரதம் பூண்டால் அதுவும் கூட ஏற்கக் கூடியதே.

ஆனால் எந்தக் குறிப்பிட்ட நோக்கமும் இல்லாமல் சொர்க்கம் புகத் தவம் செய்கிறேன் என்று சொல்லிக் கொண்டு பிரம்மச்சரிய விரதம் பூணுபவர்களை சொர்க்கம் விரும்புவதில்லை. படைப்பாற்றல் சக்தி அளிக்கப்பட்டும் தர்மநெறிப்படி வாழ்ந்து ஆனால் ஓர் உயிரைக் கூடப் படைக்காமல் சொர்க்கம் புக எண்ணுவது சரியல்ல. உங்களுக்கு இயற்கை வழங்கிய படைப்பாற்றலுக்கு நீங்கள் நியாயம் செய்யவில்லையே! உங்கள் வாரிசு என பூமியில் யாரையாவது காட்டுங்கள். உங்களுக்காக சொர்க்கத்தின் கதவுகள் இப்போதே திறக்கும்.”

மந்தபாலர் திகைத்தார். இப்படியொரு கோணத்தில் தாம் எண்ணிப் பார்க்கவே இல்லையே என வருந்தினார். தம் தவ ஆற்றலால் தாம் மறுபிறவி எடுத்து தம் படைப்பாற்றலுக்கு நியாயம் செய்தால் அதன் பின் சொர்க்கக் கதவுகள் தமக்குத் திறக்குமல்லவா என்று யோசித்தார். தேவன், “ஒரு பிறவியின் தவ ஆற்றல் மறுபிறவிக்கும் தொடரும், மறுபிறவியில் அவர் தவம் ஏதும் நிகழ்த்த வேண்டாம், தம் படைப்பாற்றலுக்கு நியாயம் செய்து தம் இனத்தைப் பெருக்க

உதவினால் அது போதும்” என்று விளக்கம் தந்தான். மந்தபாலர் தன்னை விரைவில் இனப்பெருக்கம் செய்யும் ஒரு சாரங்கப் பறவையாக உருமாறும்படி மனத்தில் சங்கல்பம் செய்துகொண்டார். அப்போதுதானே சீக்கிரத்தில் சொர்க்கம் வர முடியும்?

மறுகணம் மாபெரும் காண்டவ வனத்தில் ஒரு மரக்கிளையில் அந்த அழகிய சாரங்கப் பறவை போய் ஒய்யாரமாக அமர்ந்து கொண்டது. இயற்கையின் நியதிப்படி, அது மறுபிறவி எடுத்த கணத்திலேயே அதன் முற்பிறவி நினைவுகள் மறைந்தன. அதே மரத்தின் கிளையில் சிறகுகளைத் தன் கூரிய அலகால் கோதிக் கொண்டு ஜரிதா என்ற ஒரு சாரங்கி அமர்ந்திருந்தது. அது, தான் அமர்ந்த மரத்தின் இன்னொரு கிளையில் உட்கார்ந்த சாரங்கத்தை வியப்போடு பார்த்தது. ஜரிதாவின் எழிலும் கனிவான பார்வையும் மந்தபால சாரங்கத்தைக் கிறக்கம் கொள்ள வைத்தன. அந்தப் பெண் பறவையிடம் மந்தபால சாரங்கத்திற்குத் தீராக் காதல் தோன்றியது.

மெல்ல மெல்ல அவற்றினிடையே காதல் வளர்ந்தது. அவை இல்லற வாழ்வை மேற்கொண்டு ஒரே கூட்டில் இணைபிரியாமல் வசிக்கலாயின. ஜரிதா நான்கு முட்டைகளை இட்டது. அவற்றை அடைகாத்துக் குஞ்சு பொரிப்பதற்குள் அந்த இனிய இல்லற வாழ்வில் ஒரு விபரீதம்! லபிதா என்ற இன்னொரு சாரங்கி மந்தபால சாரங்கனை வட்டமிட்டது. அதனுடைய ஆண்மை நிறைந்த பேரழகு லபிதாவை மயக்கிக் கொள்ளை கொண்டது. லபிதா பறந்து சென்று அதன் அருகே அமர்ந்து எதையோ தேடுவதுபோல் பாவனை செய்தது.



“யார் நீ? என்ன தேடுகிறாய்?” விசாரித்தது மந்தபாலம். “உங்கள் அலகின் வளைவிலும் சிறகுகளின் அடர்த்தியிலும் என்னையறியாமல் என் உள்ளத்தைத் தொலைத்துவிட்டேன். அது இங்கே எங்கேயாவது விழுந்து கிடக்கிறதா என்று தேடுகிறேன்!”

லபிதாவின் மயக்கும் கவிதை மொழி மந்தபாலத்தைக் காந்தம் போல் இழுத்தது. தன்னை வட்டமிட்ட லபிதாவின் அழகில் லயித்த மந்தபாலம் தேடிவந்த வாய்ப்பை நழுவவிட விரும்பவில்லை. ஏற்கெனவே மணமாகி ஒரு மனைவியும் தனக்கு உண்டு என்பதையோ மனைவி இப்போது நான்கு முட்டைகள் இட்டு அடைகாத்து வருகிறது என்பதையோ நான்கு ஆண் குஞ்சுகள் வெளிப்படத் தொடங்கியுள்ளன என்பதையோ மந்தபாலம் எண்ணிப் பார்க்கவில்லை. காமம் அதன் கண்ணை மறைத்தது.

மனைவி ஜரிதாவிடம் ஏதொன்றும் கூறாமல் ஒருநாள் லபிதாவோடு இணைந்து, விண்ணில் பறந்து, தனியே இல்வாழ்வைத் தொடங்கின. “அப்பா எங்கே?” என்று கேட்டன அப்போது தான் உருப்பெறத் தொடங்கியிருந்த நான்கு ஆண் குஞ்சுகள். “உங்கள் அப்பா மனிதர்களைப் பார்த்துக் கெட்ட பழக்கத்தைக் கற்றுக் கொண்டிருக்கிறார். இரண்டாம் கல்யாணம் செய்துகொண்டு விட்டார். போகட்டும், நம்மை மறந்தவர்களை நாம் நினைப்பது நம் சுயமரியாதைக்கு அழகல்ல. உங்கள் நால்வருக்கும் நானே இனித் தாயாகவும் தந்தையாகவும் இருப்பேன். வெளியே சென்று உங்களுக்குத் தேவையான உணவை நானே சம்பாதித்து வருவேன்.

நான் உணவு பெறுவதற்காகக் கூட்டை விட்டு வெளியே செல்லும்போது மட்டும் நீங்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்!” என்றது, ஜரிதா. ஆண் குஞ்சுகள் மனம் தேறி தாய்ப்பறவை சொன்னதை ஏற்றுக் கொண்டன. ஒருநாள் திடீரெனக் காண்டவ வனத்தில் தீப்பிடித்துக் கொண்டது. இரண்டாம் மனைவி லபிதாவுடன் சுற்றிக் கொண்டிருந்த மந்தபாலம், நெருப்பைப் பார்த்துத் திகைத்தது. சரிவரச் சிறகு கூட முளைக்காத தன் நான்கு ஆண் குஞ்சுகளும் என்ன பாடுபடுமோ என்று அதன் தந்தை மனத்தில் கவலை எழுந்தது.

“ஏ அக்கினியே! என் நான்கு மகன்களையும் நீ எரிக்காமல் காப்பாற்றுவாயாக!” என்று அது மனமாரப் பிரார்த்தனை செய்தது. அதன்முன் அக்கினி பகவான் தோன்றி, “மந்தபாலமே! உன்

முற்பிறப்பில் உன் உடலையே எனக்கு ஆகுதியாக்கினாய். அந்த உன் தியாகத்தை மெச்சி உன் இப்பிறப்பில் உனது ஆண் குஞ்சுகளை நான் ஒன்றும் செய்யமாட்டேன்” என வாக்குக் கொடுத்து மறைந்தார்.

இதைக் கண்ட இரண்டாம் மனைவி லபிதா, “இன்னும் உனக்கு ஜரிதாவிடம் காதல் இருக்கிறது” என்று ஊடல்கொண்டு இன்னொரு மரக்கிளையில் தனியே போய் உட்கார்ந்து கொண்டது. அக்கினியின் வாக்குறுதி பற்றி ஏதும் அறியாத தாய்ப்பறவை ஜரிதாவைக் கலக்கம் கவ்வியது. அக்கினியிடமிருந்து இறகு சரிவர முளைக்காத பிள்ளைகளை எப்படிக் காப்பாற்றுவது?

குஞ்சுகள் பயத்தில் நடுநடுங்கின. “அம்மா! நீங்கள் தப்பித்துப் போங்கள். எங்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். நீங்கள் இருந்தால் வம்சம் விருத்தியாக வாய்ப்புண்டு. நாங்கள் நெருப்பிலேயே மடிந்தாலும் பரவாயில்லை!” என்றன. தாய்ப்பறவை ஜரிதா வேறு வழி தெரியாமல் அழுதுகொண்டே விண்ணில் சுற்றிக் கொண்டிருந்தது.

மூத்த ஆண் குஞ்சான ஜரிதாரி, “வரப்போகும் கஷ்டத்தை முன்கூட்டியே உணர்ந்து கடவுளைப் பிரார்த்திப்பவனே புத்திசாலி. அவன் கடவுள் அருளால் கஷ்டத்தைக் கடந்துவிடுவான்!” என்றது. சாரி, ஸ்தம்பமித்திரன், துரோணன் ஆகிய பிற மூன்று குஞ்சுகளும் அதை ஆமோதித்தன. அண்ணனுடன் சேர்ந்து பிரார்த்திக்கத் தொடங்கின. “அக்கினி பகவானே! நீயே சூரியன். நீயே மழை தருபவன். உன்னாலேயே உயிர்கள் உண்ட உணவு ஜீரணமாகிறது. நாங்கள் இளம் குழந்தைகள். எங்களிடம் இரக்கம் காட்டு. எங்களை அழிக்காதே!” இளம் குழந்தைகளின் மழலைப் பிரார்த்தனை அக்கினி பகவானைக் குளிரச் செய்தது. “உங்கள் தந்தைக்கு வரம் கொடுத்திருக்கிறேன். உங்களை அழிக்கமாட்டேன். உங்களுக்கென்று என்ன வரம் வேண்டும்?” என்று வெகு பிரியமாகக் கேட்டார்.

“எங்கள் தந்தையை எங்களிடமிருந்து பிரித்த லபிதாவை நாங்கள் வெறுக்கிறோம். எங்கள் தந்தை எங்களுக்கு வேண்டும்!” என்றன அவை. அக்கினி பகவான் சிரித்துக் கொண்டே “அப்படியே நடக்கும்” என்று சொல்லி படபடத்துப் பாய்ந்தார். அதோடு, தனியே மரக்கிளையில் அமர்ந்திருந்த லபிதாவைப் போகிற போக்கில் அள்ளி விழுங்கிச் சென்றுவிட்டார்! தாய்ப்பறவை ஜரிதா அக்கினி

அடங்கியதும் பாய்ந்தோடி வந்தது. சேதமில்லாமல் தன் குஞ்சுகள் இருப்பதைப் பார்த்ததும் அவற்றை அரவணைத்துக் கொண்டு மகிழ்ச்சியில் அரற்றியது. அப்போது மந்தபாலமும் அங்கே வந்துசேர்ந்தது. மனைவி, பிள்ளைகளைக் கண்டு அழுதது. ஜரிதா கணவனை வெறுப்புடன் நோக்க, பிள்ளைகளோ பாசத்தோடு தங்கள் தந்தையிடம் சென்று அமர்ந்தன.

'இந்தப் பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டும் என்று நான் தான் அக்கினி பகவானிடம் வரம் கேட்டேன். அத்தோடு அந்த சாகசக்காரி லபிதாவை இப்போது முற்றிலுமாகத் தலைமுழுகி விட்டேன்! என்னை மன்னிக்கக் கூடாதா?" என்று உருகியது மந்தபாலம். சற்று நேரம் யோசனையில் ஆழ்ந்தது ஜரிதா. குழந்தைகளுக்குத் தந்தை முக்கியமல்லவா் திருந்தி மன்னிப்புக் கேட்பவரை ஏற்பதுதான் தர்மமல்லவா என்று சிந்தித்தது. மெல்லப் பறந்துபோய்த் தன் கணவன் அருகில் அது அமர்ந்தபோது குழந்தைகள் அப்போதுதான் முளைக்கத் தொடங்கிய தங்கள் சின்னஞ்சிறு சிறகுகளை அசைத்து ஆர்ப்பரித்தன. ஜரிதாவின் முகத்தில் வெட்கம் படர்ந்த அழகை ரசித்தது மந்தபாலம்.

மேலிருந்து இந்தக் காட்சியைப் பார்த்த அக்கினி பகவான் சிரித்துக் கொண்டார். முதல் மனைவியின் வாழ்வைக் கெடுக்கும் இரண்டாம் மனைவியை வாழ்க்கை நெருப்பு எரிக்கக் கடவது என்று அவர் விதி வகுத்தார். காலப்போக்கில் மந்தபாலம் மூப்படைந்து தளர்ந்து உயிர் விட்டபோது அதன் ஆன்மா சொர்க்கம் நோக்கிச் சென்றது. என்ன ஆச்சரியம்! மந்தபால ஆன்மாவை வரவேற்க சொர்க்கத்தின் கதவுகள் தயாராய்த் திறந்திருந்தன. இரு தேவிகள் அந்த ஆன்மாவை வரவேற்கப் பூரண கும்பத்தோடு காத்திருந்தார்கள். இயல்பிலேயே வழங்கப்பட்ட படைப்பாற்றலுக்கு நியாயம் செய்த மந்தபால ஆன்மா அப்படித்தான் சொர்க்கத்தைச் சென்றடைந்தது.

(கிளையில் அமர்ந்து குடும்பம் நடத்திய சாரங்கப் பறவை பற்றிய இக்கதை, மகாபாரதத்தில் வரும் ஒரு கிளைக்கதை!)



# கேதார கௌரி விரதம்

சிவபெருமானுடை அஷ்ட மஹா விரதங்களுள் கேதார கௌரி விரதமும் ஒன்று. இந்த விரதத்தை அம்மை கௌரியே அனு‘டித்தார் என்றால் அதன் பெருமைக்கு நிகர் எதுவுமில்லை. அம்மை ஐயனின் இடப்பாகம் பெற்று அர்தநாரீசுவராக ஆனது இந்த விரத மகிமையால். கேதார கௌரி விரதம் புரட்டாதி மாதம் சுக்ல பக்ஷ அஷ்டமி நாள் தொடங்கி ஐப்பசி மாத அமாவாசை முடிய மொத்தம் இருபத்தொரு நாட்கள் இந்த விரதம் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஸ்கந்த புராணம் கூறுகிறது.

கேதாரம் என்பது இமயமலைச்சாரலைக் குறிப்பதாகும். அதாவது மலையைச் சார்ந்த வயல் பகுதியை கேதாரம் என்பர். இந்த இமயமலைக் கேதாரப்பகுதியில் சுயம்பு லிங்கமாக கேதாரேஸ்சுவரர் தோன்றினார். சக்திரூபமான பார்வதி தேவி சிவனை நினைத்து வழிபட்டு அதன் பலனாக அர்த்தநாரியாகவும், அர்த்த நாரீசுவராகவும் ஒன்றுபட்ட தினமே கேதார கௌரி விரதமாகும். வயலில் ஆலமரத்தடியில் இருந்து இவ்விரதம் அனு‘டிக்கப்பட்டதால் கேதாரகௌரி விரதம் எனவும், ஈசனை வழிபடுகின்றபடியால் கேதாரேஸ்வரி விரதம் எனவும் பெயர் பெறுகிறது.

மணமாகிய பெண்கள் தங்கள் மாங்கல்யம் தொடர்ந்தும் மங்களகரமாக இருக்க வேண்டிவும், மணமாகாத கன்னிப் பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்வை (கணவனை) வேண்டிவும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கின்றனர். மங்களகரமான வாழ்க்கையை வேண்டி ஆண்களும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கின்றனர்.

மாங்கல்ய பாக்கியமும், கணவன்இ,மனைவி இணை பிரியாது அன்போடு சுகவாழ்வு வாழும் வரமும், சகல சௌபாக்கியங்களும் நல்கும் விரதம் இந்த கேதார கௌரி விரதம். தம்பதியர் இருவரும் ஓருயிர் ஈருடலாக வரம் பெற இவ்விரதத்தினை விரும்பி அனு'டிக்க வேண்டும். ஆயுள் முழுவதும் மகிழ்ச்சியான தம்பதிகளாய் வாழ உதவும் விரதம் இது. குடும்பப் பிரச்சனை உள்ளவர்கள் இவ்விரதத்தை அனு'டிப்பதன் மூலம் குடும்ப ஒற்றுமையும் சுபீட்சமான வாழ்க்கையும் பெறுவார்கள் என்பது ஐதீகம்.

விரதம் ஆரம்பமான நாளிலிருந்து இருபத்தொரு இழைகளைக் கொண்ட நூலில் நாள்தோறும் ஒவ்வொரு முடிச்சுகளாக இடப்பட்டு இறுதி நாளன்று அந்நூலை கோயில் குருக்களைக் கொண்டு ஆண்கள் தமது வலது கையிலும் பெண்கள் தமது இடது கையிலும் அணிந்து கொள்வர். சக்திரூபமான பார்வதிதேவி சிவனை நினைத்து விரதமிருந்து, வழிபட்டு அதன் பலனாக சிவபெருமானின் (இடது பக்க) பாதியுடம்பை பெற்று, அர்த்தநாரியாகவும் அர்த்த



நாரீசுவரியாகவும் ஒன்றாகிய விரதமே கேதார கௌரி விரதமாகும். இவ்விரதத்தை லட்சுமி விரதம், அம்மன் விரதம், கௌரி நோன்பு, கௌரி காப்பு நோன்பு என்று பல பெயர்களில் தங்கள் தங்கள் குடும்ப வழக்கப்படி அழைப்பர்.

### கேதார கௌரி விரதம் தோன்றிய வரலாறு



பிருங்கி என்ற முனிவர் அதி தீவிர சிவ பக்தர். சிவனைத் தவிர வேறு யாரையும் வணங்கமாட்டார். "ஆதியும் அந்தமும் இல்லாத நாயகன் என் கயிலாயநாதன்தான். அவனின்றி ஓர் அணுவும் அசையாது "என்றெல்லாம் உள்ளார்ந்த பக்தியுடன், ஆலவாய் அழகனை மட்டுமே துதித்து வந்தார். பிறகடவுள்களை சற்றும் சிந்திக்காத அவருடை போக்கு, சில சமயம் அக்கடவுள்களாலேயே அவமதிக்கும் வகையிலும் அமைந்ததுண்டு.

அப்படி ஒரு நிலைக்கு ஆளானவள் பார்வதி. கயிலாயத்தில் தன் கணவருடன் அமர்ந்திருக்கும் போது பிருங்கி முனிவர் நேராக வந்து சிவனை மட்டும் வணங்கி வலம் வருவதும், தன்னைத் திரும்பியே பார்க்காமல் போவதும் அவளுக்கு மனவருத்தத்தைத் தந்தது.

எப்படியாவது பிருங்கி முனிவரை, தன்னையும் வணங்கச் செய்யவேண்டும் என்று விரும்பிய உமையவள், பெருமானிடம் நெருங்கி அமர்ந்துகொண்டாள். இப்படி அமர்ந்திருக்கும்போது, தன்னைத் தவிர்த்து இவரை மட்டும் பிருங்கி முனிவரால் எப்படி வலம் வர முடியும்? என்று நினைத்தாள். வழக்கம் போல் பிருங்கி முனிவர் வந்தார். சிவனோடு உமையவள் நெருங்கி வீற்றிருப்பதைப் பார்த்தார். என்ன செய்வது என்று குழம்பினார். பிறகு தெளிவாகி ஒரு வண்டாக உருவெடுத்தார். இருவருக்கும் இடையே புகுந்து சிவனை மட்டும் வலம் வந்தார்.

இதைக் கண்டு வெகுண்டாள் தேவி. சக்தியும் சிவனும் ஒன்று என்ற தத்துவம் புரியாமல், தன் தலைவனை மட்டும் வணங்கும் இந்த முனிவரின் ஆணவத்தை அடக்க எண்ணினாள். தன்னை



அவமானப்படுத்திய முனிவரின் கால்கள் முடமாகிப் போகச் சபித்தாள். அது உடனே பலித்தது. ஆனாலும், தன் பக்தனை அந்த நிலையிலேயே விட்டுவிட இறைவனுக்கு சம்மதமில்லை. அவரது கால்களை சரிசெய்ததோடு, மூன்றாவது ஒரு காலையும் உருவாக்கித் தந்தார். அதோடு ஒரு கோலையும் அளித்து, பிருங்கி முனிவர் ஊன்றிச் செல்லவும் வழி செய்து கொடுத்தார்.

தன் கணவர் முனிவருக்கே ஆதரவாக நடப்பதைப் பார்த்து அன்னை வெகுண்டாள். உடனே, தன்னை அவருடைய முழுமையான அன்புக்கு ஆக்கிக் கொள்ளத் தீர்மானித்தாள். அதற்கு தவமே சிறந்த வழி என்று நம்பி, பூலோகத்திற்கு வந்தாள். ஒரு வயல்வெளியைத் தேர்ந்தெடுத்தாள். சிவனை எண்ணி தவமிருந்தாள்.

கடுமையான தவம். அன்னையின் தவக் கடுமையியால் சுற்றி இருந்த மரங்களும்இ செடிகளும்இ கொடிகளும் கருகித் தீய்ந்தன. மனம் இளகினார் மகாதேவன். மேலிருந்து இறங்கி வந்தார். உமையவளுக்கு தரிசனம் தந்து அவளை ஆட்கொண்டார். “ஒரு நாளும் உமைப் பிரியாத வரம் வேண்டும்” என்று வேண்டினாள் அன்னை. “தந்தேன்”என்றார் மகாதேவன்.
“உங்களைக் பிரியாத” என்றால் அருகிலேயே இருப்பதல்ல. உடலோடு ஒன்றியதாக.....உடலைவிட்டுப் பிரிக்க முடியாதவளாக.....” என்று மகாதேவி வரம் கேட்டாள். புரிந்து கொண்டார் பரமன்.. அவள் வேண்டிய வரத்தை அளித்தார். அர்த்தநாரீஸ்வரர் ஆனார்.



தேவிக்கு சந்தோ‘ம். இனி பிருங்கி முனிவரல்ல, யாருமே என்னை என் தலைவனிடமிருந்து பிரிக்க முடியாது. சிவன் வேறு, சக்தி வேறு என்று பிரத்துப் பார்ப்பவரகள், இனி இரண்டும் ஒன்றே என்பதை பரிபூரணமாக உணர வேண்டும் என்று சிவனுடன் சேர்ந்து விதி செய்தாள்.

இவ்வாறு அம்பிகை, இறைவனின் உடலில் ஒரு பாதியாகி,

கணவனிடமிருந்து எந்நாளும் பிரிக்க முடியாத பந்தத்தை உருவாக்கிக் கொண்ட நாள்தான் கேதார கௌரி விரதநாள். கேதாரம் என்றால் வயல். கௌரி என்ற பார்வதி வயல்வெளியில் தவமிருந்து சிவபெருமானின் அருளைப் பெற்றதால் இந்த விரதம் "கேதாரகௌரி விரதம்" என்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக தீபாவளி அன்றோ அல்லது தீபாவளிக்கு மறுநாளே இந்த விரதமும் மேற்கொள்ளப் படுகிறது. தீபாவளித் திருநாள் குடும்பத்தின் மகிழ்ச்சியைக் கூட்டும் நாள்.

கணவன் – மனைவியிடையே மாறாத அன்பை வளரத்துக் கொள்ள உதவும் பண்டிகை. தான், தன் கணவர், தன் குழந்தைகள், வீட்டிலுள்ள பிற பெரியவர்கள் என்று அனைவரிடையேயும் அன்பும், பாசமும் நீடித்து நிலைக்க வைக்கும் கொண்டாட்டம்.

தம் மாங்கல்ய பலம் நீடிக்கவும், தன் மீதான கணவரின் அன்பு என்றும் குறையாது நிலைத்திருக்க வேண்டும் என்ற வரத்தைப் பெற கேதார கௌரி விரதத்தை சுமங்கலிகள் கடைப்பிடிக்கிறார்கள். அன்றைய தினத்தில், பண்டிகைக்கான பூஜைகளுக்குப் பிறகோ அல்லது முடிந்தால் அதற்கு முன்னதாகவோ, பூஜை அறையில் விளக்கேற்றி, சிவபெருமான் படம் அல்லது லிங்கம் அல்லது சிவ – பார்வதி படத்தின் முன் பக்தியுடன் அமர்ந்து தியானம் செய்ய வேண்டும்.

சிவ துதிகளைப் பாட வேண்டும். அம்மன்- சக்தி பாடல்களைப் பாட வேண்டும். "ஓம் நமச்சிவாய. சிவாய நம ஓம், ஓம் நமச்சிவாய சிவாய நம ஓம்" என்று பஞ்சாட்சர மந்திரத்தை அன்று முழுவதும் ஓதிக்கொண்டே இருக்க வேண்டும்.

முடிந்தால்இ சிவலிங்கத்திற்கு பால் அபிஷேகம் செய்யலாம். அந்த அபிஷேகப் பாலையே பிரசாதமாக அருந்தலாம். குடும்பத்தில் பிறருக்கும் கொடுக்கலாம். பாயாசம், அல்லது அப்பம் நைவேத்தியம் செய்யலாம். தம் கணவர் மற்றும் தம் குடும்ப உறுப்பினர் அனைவரது நலனுக்காகவும் உமையொரு பாகனை வேண்டிக்கொள்ளலாம்.

